

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில், நேற்று (07.01.2025), சென்னை, தலைமைச் செயலகத்தில், எச்.எம்.பி.வி தொற்று தொடர்பான கலந்தாலோசனை கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாகு, உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை ஆணையர் ஆர்.லால்வேனா, சிறப்பு செயலாளர் திருமதி.வ.கலையரசி, இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதித் துறை இயக்குநர் திருமதி.மு.விஜயலட்சுமி, தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகத்தின் நிர்வாக இயக்குநர் எம்.அரவிந்த், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தின் தலைவர் திருமதி. பி.உமா மகேஸ்வரி, தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி.சீதாலட்சுமி, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண்தம்புராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.டி.சி.செல்வவிநாயகம், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ.சங்குமணி, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மரு. ராஜமூர்த்தி மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் (ESI) இயக்குநர் மரு.இளங்கோ மகேஸ்வரன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



வனத்துறை அமைச்சர் க.பொன்முடி நேற்று (07.01.2025) கிண்டி சிறுவர் இயற்கை பூங்காவில் கடல் ஆமைகள் பாதுகாப்பு மற்றும் மீட்பு முயற்சிகள் குறித்து நடைபெற்ற மாநில அளவிலான பயிலரங்கு மற்றும் கடல் ஆமைகள் பாதுகாப்பிற்கு உதவிடும் கலாமை பாதுகாவலர்கள் பயன்பாட்டு செயலினை துவக்கி வைத்தார்கள். உடன் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை முதன்மை செயலர் முனைவர். ப.செந்தில்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி துணைமேயர், மு.மகேஷ்குமார், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத்தலைவர்), சீனிவாஸ் ரா.ரெட்டி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வனஉயிரின காப்பாளர், ராகேஷ் குமார் டோக்ரா, கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனஉயிரினம்), முனைவர்.வ.நாகநாதன், கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் இயக்குநர், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, வண்டலூர், ஆஷிஷ்குமார் ஸ்ரீவத்ஸவா ஆகியோர் உடன் உள்ளனர்.

### மாணவ – மாணவிகளுக்கு

# பல்கலைக்கழகங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகள்!

## அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தலைமையில் ஆய்வுக் கூட்டம்!



தலைமைச் செயலகத்தில் நேற்று (07.01.2025) உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தலைமையில் உயர்கல்வித் துறையின் கீழ் செயல்படும் பல்கலைக் கழகங்களில் பயிலும் மாணவ, மாணவிகளின் பாதுகாப்பை உறுதி செய்திட மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பல்கலைக் கழகங்களின் பதிவாளர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், உயர்கல்வித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், கல்லூரிக் கல்வி இயக்கக ஆணையர் திருமதி எ. சுந்தரவள்ளி, உயர் கல்வித் துறை இணைச் செயலாளர் துரை. ரவிச்சந்திரன், மற்றும் பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள், இணை இயக்குநர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை, ஜன.8-

பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள், மாணவ மாணவிகளின் பாதுகாப்பிற்கு மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் அவர்கள் தலைமையில் நேற்று (07.01.2025) நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் இந்திய அளவில் உயர்கல்வியில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்கும் வகையில் சீரிய திட்டங்களை வழங்கி செயல்படுத்தி வருகிறார்கள். மாணவ மாணவிகளின் கல்வித் தரம் உயர வேண்டும், மாணவ மாணவிகள் கல்வி கற்க பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக் கூடாது என்பதை கருத்தில் கொண்டு புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன், நான் முதல்வன் போன்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

இந்திய அளவில் மட்டுமல்லாது தமிழ்நாட்டை உலக அளவில் உயர்கல்வியில் சிறந்த முதன்மை மாநிலமாக உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் உயர்கல்வித் துறை சார்பில் பல்வேறு முன்னெடுப்புகள் செய்யப்பட்டு வருகிறது.

அண்ணா பல்கலைக்கழகத்தில் நடந்த விரும்பத்தகாத சம்பவத்தில் முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்பது அனைவரும் அறிந்தே.

இது போன்ற சம்பவங்கள் எந்தவொரு கல்வி நிறுவனத்திலும், நிகழாமல் இருப்பதை உறுதி செய்யும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கல்வி நிறுவனங்களில் இரவு நேரங்களில் அனைத்து பகுதிகளிலும் மின்விளக்குகள், காண்காணிப்பு கேமராக்கள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

குறிப்பாக கூர்நோக்கு பகுதிகள் கண்டறியப்பட்டு அங்கு மின்விளக்குகள் மற்றும் கண்காணிப்பு கேமராக்கள் அமைக்கப்பட வேண்டும். கல்வி நிறுவன வாளகத்திற்குள் உள் நுழைபவர்கள் மற்றும் வெளியே செல்பவர்களின் தகவல்கள் பதிவேட்டில் பராமரிக்கப்பட வேண்டும். வளாகத்திற்குள் கண்டிப்பாக மாணவர்கள் பேராசியர்கள், பணியாளர்கள் அனைவரும் அடையாள அட்டை அணிந்திருக்க வேண்டும். அவசர காலங்களில் உதவும் வகையில் தமிழ்நாடு காவல் துறையால் உருவாக்கப்பட்டுள்ள "காவல் உதவி" செயலியின் பயன்பாடு குறித்து மாணவ மாணவிகளுக்கு எடுத்துரைக்க வேண்டும். கல்வி நிறுவனங்களில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ள பாதுகாப்பு அலுவலர்கள் இரவு நேரங்களில் தொடர் ரோந்து பணியில் ஈடுபட வேண்டும், பாதுகாப்பு நடவடிக்கைகளில் மாணவ மாணவிகளின் ஆலோசனையினையும் பெற்று அவற்றை செயல்படுத்த வேண்டும் உள்ளிட்ட பல்வேறு பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து, மேலும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், உயர்கல்வித் துறையை மேலும் செம்மைப்படுத்தவும் பதிவாளர்களின் ஆலோசனைகளை வரவேற்பதாக தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் நான் முதல்வன், புதுமைப் பெண் மற்றும் தமிழ்ப் புதல்வன் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்துவது, பல்கலைக்கழகங்கள் மற்றும் இணைவு பெற்ற கல்லூரி வளாகங்களில் வளாக பாதுகாப்பு, மாணவ மாணவிகளின் பாதுகாப்பிற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், ஆராய்ச்சி மாணவர்களுக்கு வாய்மொழித் தேர்வு மற்றும் பிறநடைமுறைகளை சரியான நேரத்தில் நடத்துதல், மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களிடமிருந்து பெறப்படும் புகார்களுக்கு உடனுக்குடன் நடவடிக்கை எடுத்தல், உதவி மையம் / உள் புகார் குழுவின் நடவடிக்கைகள், மாற்று திறனாளிகளுக்கான சிறப்பு படிப்புகள், மின் ஆளுமை தொடர்பான முன்னெடுப்புகள், இடை நிற்றல் சதவீதத்தின் பகுப்பாய்வு உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில், உயர்கல்வித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், கல்லூரிக் கல்வி இயக்கக ஆணையர் திருமதி. எ.சுந்தரவள்ளி, உயர்கல்வித் துறை இணைச் செயலாளர் துரை. ரவிச்சந்திரன் மற்றும் பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள், இணை இயக்குநர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**அரங்கத்துறை** அ.து.ந.க.எண்.அ3 / 1630 / 2024

**மின்னணு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு**

கண்காணிப்பு பொறியாளர் (பூ(ம)வி) அவர்களால் கீழ்கண்ட பணிக்கு இரண்டு உறை முறையில் மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

**Rejuvenation of Playground at Burma Nagar in Div - 16, Unit - 4, Zone - 2**

**பணியின் உத்தேச தொகை ரூ.83.68 இலட்சம் (including 18% GST)**
முன்வைப்பு தொகை :- பணியின் மதிப்பில் 1% : ரூ.84,000/-

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : **23.01.2025 அன்று மாலை 3.00 மணி வரை**

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : **24.01.2025 அன்று மாலை 3.30 மணி**

மேலும் விவரங்களுக்கு **http://tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 78 / ஒப்பந்தப்புள்ளி / 2025 கண்காணிப்பு பொறியாளர் (பூ(ம)வி)






திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி அறிஞர் அண்ணா அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் நூற்றாண்டு விழா முன்னிட்டு நூற்றாண்டு விழா குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக மினி மாரத்தான் ஓட்டம் பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு. நாசர் கலந்து கொண்டு கொடியசைத்து போட்டியை துவக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் பூந்தமல்லி நகர திமுக செயலாளர் ஜி.ஆர்.திருமலை, திருவள்ளூர் மாவட்ட வருவாய் அலுவலர் ராஜ்குமார், முதன்மை கல்வி அலுவலர் ரவிச்சந்திரன், மாவட்ட கல்வி அலுவலர் ரவி, ஒன்றிய செயலாளர்கள் ப.ச.கமலேஷ், டி.தேசிங்கு, பூந்தமல்லி நகர மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர், துணைத் தலைவர் ஸ்ரீதர், நகராட்சி ஆணையர் மகேஸ்வரி, உள்பட பலர் கலந்து கொண்டார்கள்

### சென்னை தீவுத்திடலில் 49வது

# இந்திய சுற்றுலா - தொழில் பொருட்காட்சி 2025ல் சி.எம்.டி.ஏ. கண்காட்சி அரங்கு!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பார்வையிட்டார்!



முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (07.01.2025) சென்னை தீவுத்திடலில் 49வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 2025ல் இடம் பெற்றுள்ள சி.எம்.டி.ஏ. கண்காட்சி அரங்கினை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா ராஜன். வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், மண்டலக் குழுத்தலைவர் ஸ்ரீராமலு, தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் எஸ்.ருத்ரமூர்த்தி, அயாலசுப்ரமணியன், ந.ரவிக்குமார். கண்காணிப்பு பொறியாளர்கள் ராஜமகேஷ்குமார். மா.பாலமுருகன், மண்டல அலுவலர் திருமதி.பரிதா பானு, மக்கள் தொடர்பு அலுவலர் எஸ்.எம்.திவாகர். மாமன்ற உறுப்பினர் எம்.இசட்.ஆசாத் மற்றும் சி.எம். டி.ஏ. அலுவலர்கள் உடனிருந்தனர்.

சென்னை, ஜன.8

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (07.01.2025) சென்னை தீவுத்திடலில் 49வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 2025-ல் இடம்பெற்றுள்ள சி.எம்.டி.ஏ. கண்காட்சி அரங்கினை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டார்.

சென்னை தீவுத்திடலில் நடைபெறவுள்ள 49வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 2025-ல் இடம்பெற்றுள்ள சி.எம்.டி.ஏ. கண்காட்சி அரங்கானது சென்னை, குத்தம்பாக்கத்தில் கட்டப்பட்டு வரும் புதிய புறநகர் பேருந்து முனையத்தின் முகப்புடன் வடிவமைத்து காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

குத்தம்பாக்கம் புதிய புறநகர் பேருந்து முனையமானது உலகத்தரம் வாய்ந்த சிறந்த கட்டமைப்பு வசதிகளுடன் இந்தியாவிலே இரண்டாவது பெரிய பேருந்து முனையமாக கட்டப்பட்டு வருகிறது. கிளாம்பாக்கம், கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையமானது அனைத்து வசதிகளுடன் இந்தியாவிலே மிகப்பெரிய பேருந்து முனையமாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னை தீவுத்திடலில் உள்ள சென்னை பெருநகர் வளர்ச்சி குழும அரங்கத்தில் கடந்த மூன்றரை ஆண்டுகளில் சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் சார்பில் சுமார் ரூபாய் 2,600 கோடி மதிப்பீட்டில் 193 புதிய திட்டங்கள் மற்றும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வரும் திட்டங்கள் அடங்கிய கண்காட்சி அரங்கமாக காட்சி அமைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இந்த அரங்கில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் கட்டப்பட்டு வரும் புதிய பேருந்து நிலையங்கள், பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், சமுதாய நலக்கூடங்கள், முதல்வர் படைப்பகம், நூலகங்கள், ஏரிக்கரை மற்றும் கடற்கரையை மேம்படுத்துதல் என பல்வேறு திட்டங்களாக விளக்கக் கூடிய வகையில் புகைப்படக் கண்காட்சியாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த அரங்கில் பொதுமக்கள் பார்க்கும் வகையில் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் பல்வேறு திட்டங்கள் மற்றும் சாதனைகள் விளக்கும் வகையில் 84 புகைப்படங்கள் அடங்கிய கண்காட்சியாக வைக்கப்பட்டுள்ளது.

இந்த கண்காட்சி அரங்கில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வால்டாக்ஸ் சாலை மற்றும் ஸ்டான்லி மருத்துவமனை சாலையில் கட்டப்பட்டு வரும் புதிய குடியிருப்புகள் மாதிரி வடிவம் (*Miniatures*), கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையம் மாதிரி வடிவம், கொளத்தூர் மக்கள் சேவை மையம் மாதிரி வடிவம் மற்றும் கோயம்பேட்டில் உள்ள சிஎம்டிஏ அலுவலகத்தின் மூன்றாம் கட்டிடம் மாதிரி வடிவம் உள்ளிட்ட பல்வேறு மாதிரிகள் பொது மக்களின் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிகழ்வின்போது, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா ராஜன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், மண்டலக் குழுத்தலைவர் ஸ்ரீராமலு, தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் எஸ்.ருத்ரமூர்த்தி, அ.பாலசுப்ர மணியன், ந.ரவிக்குமார், கண்காணிப்பு பொறியாளர்கள் ராஜமகேஷ்குமார், மா.பாலமுருகன், மண்டல அலுவலர் திருமதி.பரிதா பானு, மக்கள் தொடர்பு அலுவலர் எஸ்.எம்.திவாகர், மாமன்ற உறுப்பினர் எம்.இசட்.ஆசாத் மற்றும் சி.எம்.டி.ஏ. அலுவலர்கள் உடனிருந்தனர்.

### சேப்பாக்கம் பகுதியில் பொங்கல் விழா!

# பொங்கல் பரிசு - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்குகிறார்!

## பகுதிச் செயலாளர் எஸ்.மதன்மோகன் அறிக்கை

சென்னை,ஜன,8

சேப்பாக்கக் பகுதிக் கழகம் சார்பில் பொங்கல் திருநாளை முன்னிட்டு கழகத்தினருக்கு பொங்கல் பரிசை துணை முதல்வர் உதய நிதி ஸ்டாலின் வழங்குகிறார். இவ் விழாவில் பகுதிக் கழகத்தினர் பங்கேற்றிட வேண்டுமாய் பகுதிச் செயலாளர் - மண்டலக் குழுத் தலைவர் எஸ்.மதன் மோகன் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து எஸ்.மதன் மோகன் எம்.சி. அறிக்கை வருமாறு:

சேப்பாக்கம் பகுதிக் கழகம் சார்பில் தமிழர் திருநாளாம் பொங்கல் விழா நாளை (9.1.2025 வியாழக் கிழமை) மாலை 4 மணிக்கு, இராயப் பேட்டை, ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் நடைபெறுகின்றது.

இவ் விழாவில் தமிழர் திருநாளாம் பொங்கல் விழாவை முன்னிட்டு பகுதிக்குட்பட்ட நிர்வாகிகள்,பாக முகவர்கள், பாக உறுப்பினர்களுக்கு பொங்கல் பரிசை கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சரு மான உதய நிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கி சிறப்பிக்கிறார். இவ் விழாவில் தயாநிதி மாறன் எம்.பி.,மு.க.தமிழரசு, மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். எனவே இவ் விழாவில் கழக முன்னணியினர், தோழர்கள் திரளாக கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பகுதிச் செயலாளர் - மண்டலக் குழுத் தலைவர் எஸ்.மதன் மோகன் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### செம்பாக்கம் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஏ.கே.கருணாகரனின் தாயார் – மறைந்த

# லலிதா குப்புசாமி திருவுருவப் படம்: அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைக்கிறார்!

## டி.ஆர்.பாலு எம்.பி. நினைவேந்தல் உரையாற்றுகிறார்! இ.கருணாநிதி எம்.எல்.ஏ. தலைமை!

காஞ்சிபுரம், ஜன. 8 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், செம்பாக்கம் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் ஏ.கே.கருணாகரனின் தாயார் (நினைவில் வாழும்) லலிதா குப்புசாமி அவர்களின் திருவுருவப் படத்திறப்பு நிகழ்ச்சி இன்று (8.1.2025 - புதன்கிழமை) மாலை 5.30 மணிக்கு, எண். 3, சாய் இல்லம், சாரங்கன் தெரு, நாரதபுரி நேரு நகர், குரோம்பேட்டையில் நடைபெறு கிறது.

நிகழ்ச்சிக்கு மாவட்டக் கழக துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

பகுதிக் கழகச் செயலாளர்கள் இ.ஜோசப் அண்ணாதுரை, வே.கருணாநிதி, த. ஜெயகுமார், இ.எஸ்.பெர்னார்ட், ஒன்றியச் செயலாளர் ஜி.கே.ரவி (எ) விவேகானந்தன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் அன்னாரின் திருவுருவப் படத்தினை திறந்து வைத்து அஞ்சலி செலுத்துகிறார்.

இந்நிகழ்ச்சியில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. நினைவேந்தல் உரை ஆற்றுகிறார்.

இந்நிகழ்ச்சியில் கழக தீர்மானக் குழுச் செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ, மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் படப்பை ஆ. மனோகரன், ஆதிமாறன், டி.காமராஜ், எஸ்.இந்திரன், இரா.பொன்னுராம், அ.தமிழ்மாறன், எஸ்.நவீன், எஸ்.சேகர், ஆ.நடராஜன், இரா.சுரேஷ், கண்.தேவேந்திரன், ஆர்.எஸ்.சங்கர், மு.ரஞ்சன், இரா.நரேஷ் கண்ணா, பொன்.சதாசிவம், வ.விஜயசங்கர், கோல்டு டி.பிரகாஷ், எல்.பிரபு, ஏ.வீரபத்திரன், எச்.பாஸ்கரன், கே.பூபதி, சரஸ்வதி சந்திரசேகர், டி.கார்த்திக், க.ரமேஷ், கி.தன சேகரன், வே.தாமோதரன், த.ராஜாராமன், சி. ஆர்.மதுரைவீரன், ம.பற்குணன், ஒ.தண்டபாணி, ஜி. ஜெகநாதன், பி.பாலச்சந்தர், கோ.ஜானகிராமன், எம்.ஐ.டி.எஸ்.விஜய், ஜெ. இன்சமாம், ஜெ.வேணுகோபால், சி.ஆர்.எம்.மனோஜ்குமார், எல்.டில்லிபாபு, சி.ஆர். நரேஷ்குமார், எம்.இளவரசன், எம்.நாகராஜ், ஏ.ரங்கநாதன், எம்.சார்லஸ், ஆர்.ராதாகிருஷ்ணன், ஜெ.சந்திரசேகர், எஸ்.மன்னாராஜ கண்ண, ந.கண்ணன், சங்கீதா விஜய், சரண்யா மதுரை வீரன், கற்பகம் சுரேஷ், சி. மனுவேல், சி.ஜெகன், ஆர். ராஜா மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு திருவுருவப் படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்துகின்றனர்.

செம்பாக்கம் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் ஏ.கே.கருணாகரன், 37 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மகாலட்சுமி கருணாகரன் ஆகியோர் அனைவரையும் வரவேற்கின்றனர்.